# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 02 திங்கட்கிழமை (15~05~2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:146

# ஆறாயிரம் கோடி ரூபாவுக்கு அரசு அவசரமாக ஆயுதங்கள் கொள்வனவு

## தொலைபேசி: இப்போதைக்கு சீராகாது

வவுனியா,மே15

யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசிச் சேவை உடனடியாகச் சீராகும் சாத்தியமில்லை என்று "ரெலிக்கொம்" வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

ஜூன் மாதம் நடுப்பகுதிக்குப் பின்னரே தொலைபேசிச் சேவையை ஓரளவாவது சீராக்க முடியும் என்று "ரெலிக்கொம்" உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மடுகந்த - மன்னார் தொலைத் தொடர்பு வழியாக யாழ்ப்பாணத

(4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நெருக்கடியை சமாளிக்க ஏற்பாடு

கொழும்பு,மே15

**தற்போதைய யுத்த நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் 80 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் ஆறாயிரம் கோடி ரூபா) பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் செய்தி வெளியிட்டிருக்கின்றார்.**

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் கதிர்காமர் கூறியிருப்பதாவது:-

யாழ்.குடாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றேல் நாட்டின் இரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## உதயனுக்கு எச்சரிக்கை!

அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொதுசனப் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு இசைவற்ற வகையில் - தற்போதைய இராணுவ நடவடிக்கைகளைப் பாதிக்கும் விதத்தில் - மக்களைக் குழப்பமுறச் செய்யும் போக்கில் - "உதயன்" ஒரு சில செய்திகளை வெளியிட்டதாகத் தெரிவித்து, அதற்காக உதயனுக்கு படைத்தரப்பினால் நேற்று உத்தியோகபூர்வமாக கடும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

வடபகுதி இராணுவத் தலைமையகத்தின் சார்பில் படை உயர் அதிகாரி ஒருவர், உதயன் ஆசிரியபீட பிரதிநிதி ஒருவரை முகாமுக்கு அழைத்து, இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

தொடர்ந்தும் புதிய சட்ட விதிகளுக்கு இசைவற்ற வகையிலான செய்திகளை வெளியிட்டால், அந்தச் சட்ட "விதிகளுக்கமைய தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்துக்கு மேலதிக படைகள்

கொழும்பு,மே15

யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவத்தினருக்கு மேலதிக ஆயுதங்கள் வழங்கப்படுவதோடு மேலதிக படையினரும் குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

யாழ்., வன்னி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேரில் சந்தித்து யாழ். யுத்த நிலைமை குறித்து அவருக்கு விளக்கமளித்தார்.

அப்போது யாழ். நிலைமைகளை எதிர்கொள்வதற்குத் தமக்கு மேலதிக ஆயுதங்களும் படையினரும் தேவைப்படுவதாக ஜெனரல் ஜானக பெரேரா குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

அவரது கோரிக்கையை ஏற்று ஆயுதங்களுடன் மேலதிகப் படையணிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததாக கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்று தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தைப் புலிகளின் கைகளில் வீழாமல் தக்கவைக்க முடியும் என்று ஜெனரல் ஜானக பெரேரா ஜனாதிபதியிடம் நம்பிக்கை தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (உ)

## செய்தித் தணிக்கை குறித்து அரசுக்குள்ளேயே லடாய்!

கொழும்பு,மே15

செய்திகளைப் பிரசுரிக்கும் விடயத்தில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் வகையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் புதிய விதிகளை அரசு நடைமுறைப்படுத்தியிருப்பது குறித்து அரசுக்குள்ளேயே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பது அம்பலமாகியிருக்கின்றது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் புதிய தணிக்கை விதிகளை கடுமையாகச் சாடியிருக்கின்றார்.

இந்தத் தணிக்கை சர்வதேச ரீதியில் பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதாகவும்-

அதனால் அதனை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்ற - சாரப்பட லஷ்மன் கதிர்காமர் அப்பேட்டியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்தப் பேட்டியில் தணிக்கைக்கு எதிராக கதிர்காமர் கடுமையான கருத்துக்களை கூறியதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அவர் என்ற முறையில் தணிக்கை விதிகளுக்கு எதிராக வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் இராஜதந்திரிகள் அவருக்குக் கொடுத்த அழுத்தம் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

"தணிக்கை விதிகள் உரிய பயன்தரா என்ற சாரப்பட கதிர்காமர் கூறியிருக்கின்றாரே?" என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவிடம் செய்தி நிறுவனம் ஒன்று கேள்வி எழுப்பியது.

"அது அவரது தனிப்பட்ட கருத்து. இன்றைய யுத்த நிலையில் தணிக்கை முழுதாக - கடுமையாக நடைமுறைப்படுத்தப்படேயாக வேண்டும்" - என்று அமைச்சர் திஸநாயக்கா பதிலளித்துள்ளார்.

தணிக்கைகக்கு எதிராக லக்ஷமன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக்கள் மற்றைய சில அமைச்சர்களையும் சீற்றமுற வைத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## யாழ்.ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் செஞ்சிலுவைக் கொடி, சின்னம்

யாழ்.போதனா வைத்தியசாலைப் பகுதியை தாக்குதலற்ற பிரதேசமாகக் கணிக்கும் வகையில் வைத்தியசாலையின் அலுவலகக் கட்டடத்தின் கூரை மீது செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கப்படவுள்ளதுடன் செஞ்சிலுவைக் கொடியும் பறக்கவிடப்படவுள்ளது.

யாழ்.நகரப்பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் தாக்குதல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோயாளர் அச்சமின்றி சிகிச்சை பெறவும் வைத்தியர்கள் மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவரும் பீதியற்ற நிலையில் கடமையாற்றவும் இந்த நடவடிக்கை உதவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் மத்தியஸ்தத்தை இலங்கை அரசு ஏற்கலாம்!

### கதிர்காமர் தெரிவிப்பு

புதுடில்லி,மே15

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமரசம் செய்து வைக்க இந்தியா முன்வந்திருப்பதை இலங்கை அரசு வரவேற்பதாகவும் இது குறித்து இந்தியாவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் பட்சத்தில் அதனைப் பரிசீலனை செய்ய இலங்கை தயாராக இருப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சம்மதம் தெரிவித்தால் இலங்கை இனப்பிரச்சினையில் சமரசம் செய்துவைக்க இந்தியா தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தியா சமரசம் செய்து வைக்க முன்வந்திருப்பதைஇலங்கை அரசு ஏற்கும் சாத்தியம் உண்டு என்று கதிர்காமர் கூறினார். (இ-9)

## வடக்கு யுத்த நிலைவரம்

## சமர் நேற்றும் மந்த நிலையில்! தொடர்ந்து கிபிர் குண்டுவீச்சு!!

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.நகரை அண்டிய யுத்த முனையில் நேற்றும் மோதல்கள் மந்த நிலையிலேயே இருந்தன.

இருதரப்பும் மாறி மாறி ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் தீவிரம் காட்டின.

நேற்று முன்தினம் இரவு குருநகர் பாஷையூர்ப் பகுதிகளை அண்டிய கடற்பகுதிகளில் படகுகளிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் விடாது நடத்தப்பட்டன. இந்தச் சத்தத்தால் நகரமே அதிர்ந்தது.

கல்முனைக் கடற்பரப்பில் படகு ஒன்று தீப்பற்றி எரிந்ததை கண்டதாக கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

விமானப் படையின் கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் அரியாலை பூநகரி உட்பட்ட புலிகளின் நடமாட்டம் உள்ள - பகுதிகள் மீது பல் தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

.(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யுத்த நெருக்கடி ஐ.நா.பாதுகாப்புச்சபைக்கு?

இலங்கை யுத்த நெருக்கடியை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்ல சில மேற்கத்திய சக்திகள் முயற்சி செய்கின்றன. ஆனால் ரஷ்யா, சீனா போன்ற இலங்கையின் நட்புநாடுகள் பாதுகாப்புச் சபையில் தமக்குள்ள 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த முயற்சியை ஆரம்பத்திலேயே முறியடித்துவிடும்.

மேற்கண்டவாறு வெளிவிவகார அரமச்சர் லஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் இந்த நெருக்கடியை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்வது இலங்கையின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

ஆனால் சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இது விடயத்தில் இலங்கையின் இறைமையைக் காக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் என நாம்நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம்- இப்படி அவர் மேலும் கூறியுள்ளார். இதேவேளை சியராலியோனில் எவ்வாறு ஐ.நா.வின் தலையீடு ஏற்படுத்தப்பட்டதோ அதே போன்ற ஒரு தலையீட்டையே இலங்கைப் பிரச்சினையிலும் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாதுகாப்புச் சட்டவிதிகளை நீக்கக் கோருகிறது ஜே.வி.பி

கொழும்பு, மே15

அவசரகாலச்சட்டத்தின் கீழ அரசு பிரகடனப்படுத்தியுள்ள விசேட சட்ட விதிகளை ரத்துச் செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இது தொடர்பாக ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்கின்ற அமைப்பென்ற வகையில் இப்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலை குறித்து நாம் கவலை அடைகின்றோம்.

நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் சம அந்தஸ்தை வழங்க அரசு தவறியதாலும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணத் தவறியதாலுமே தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண முடியாமல் போயிருக்கின்றது.

அரசும் முன்னைய ஆட்சியாளர்களும் மக்களின் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளத் தவறியதுடன் சுயலாப நோக்குடன் செயற்பட்டதாலேயே இன்று முழுநாடும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. நாட்டின் தேசியப் பிரச்சினை உக்கிரமடைந்திருக்கின்றது.

இந்த நிலையில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் விசேட சட்ட விதிகளை ரத்துச் செய்யவேண்டும்.

- இவ்வாறு அவர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

(உ-8)

## குடும்ப விவரம் சேகரிப்பு

வடபகுதியில் தற்போது அதிகரித்து வரும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் பிரிவுகளில் தங்கியிருக்கும் பொதுமக்களின் குடும்ப விவரங்களைப் பதியும் வேலைகள் அந்தந்தப் பிரதேச கிராம அலுவலர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-9-139)

## ஒத்திவைப்பு

இன்றும் நாளையும் நடை பெறவிருந்த உடுவில் கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டிகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தெரிவித்தார். (இ-5)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

மறவன்புலவு மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த மோகனசுந்தரம் இராசரூபன் என்பவரின் விசேட அடையாள அட்டை 091032220 மற்றும் தேசிய, பாடசாலை அடையாள அட்டைகள் கல்வியங்காடு சட்டநாதர் வீதியில் கடந்த 11 ஆம் திகதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பொ.வீரசிங்கம் சிறுப்பிட்டி கிழக்கு, பன்னாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (76150)

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேசி காளை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- ப.கிருஷ்ணன், 62/2இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (76152)

## றத்தோட்டையில் குண்டு மீட்பு

கொழும்பு,மே15

றத்தோட்டையில் உள்ள தையல் கடை ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று அப்பகுதி பொலீஸாரால் மீட்கப்பட்டது.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கடையில் இருந்த 6 பேரை பொலீஸார் கைதுசெய்தனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை ரத்தோட்டைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (உ-8-9)

## செயலக ஊழியரை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே15

யாழ் செயலகத்தில் கடமையாற்றும் சகல பணியாளர்களையும் இன்று காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் கூடுமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவசிய தேவைகள் தொடர்பாக கலந்துரையாடவேண்டியதால் திணைக்களத் தலைவர்களை கட்டாயம் வருகைதருமாறும் அவர் கேட்டுள்ளார்.

## வல்லை ஆஸ்பத்திரியில் விடுதி திறப்பு

நெல்லியடி,மே15

இரண்டு லடசம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் கட்டி முடிக்கப்பட்ட ஆண்கள் விடுதி இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்படும்.

போரூட் நறுவனத்தினால் இந்த நிதி வழங்கப்பட்டதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தெரிவித்தார். (உ-109)

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு ஊரடங்கு பாஸ்

யாழ்ப்பாணம், மே15

யாழ் மாநகரசபைப் பகுதிக்குள் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதனால் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஊரடங்குப் பாஸ் வழங்கப்படவுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் படை அதிகாரிகளுடன தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9-5-139)

## சீனாவிலிருந்து ரயில் என்ஜின்கள்

கொழும்பு,மே15

சீனாவில் இருந்து புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட 5 ரயில் என்ஜின்களும் 15 பெட்டிகளும் கடந்த வெள்ளிக்கிழமை கப்பல் மூலம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இதே வேளை - மேலும் 10 என்ஜின்களும் 40 பெட்டிகளும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன என்றும் -

இந்த வருட இறுதிக்குள் பிரான்ஸ் மற்றும் இந்தியாவில் இருந்து மேலும் 12 என்ஜின்களும் 25 பெட்டிகளும் இறக்குமதி செய்யப்படவிருப்பதாகவும்-

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார். இவற்றுக்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (இ-9)

# தேசியப் பரீட்சைகளின் முடிவுகள் 3 வாரத்தில்

கொழும்பு,மே15

பரீட்சைத் திணைக்களத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்படும் பரீட்சைகளின் பெறுபேறுகளை இனி மேல் மூன்று வாரங்களுக்குள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று அந்தத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் பிரிவு கணனிமயமாக்கப்பட்டதன் காரணமாகவே பெறுபேறுகளை விரைவாக வெளியிட வசதி ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து கணனி மூலம் நேரடியாகப் பல்கலைக்கழகங்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (உ-3-4)

# கைது செய்யப்பட்ட சமயம் சயனைட் அருந்திய இளைஞன்

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு,மே15

பம்பலப்பிட்டி குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாக நடமாடிய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்ட சமயம் "சயனைட்" அருந்தியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய இளைஞன் ஒருவனைத் தாம் கைது செய்ததாகவும் -

அச்சமயம் அந்த இளைஞன் வாந்தி எடுத்ததாகவும்-

அவரை வைத்தியசாலையில் அனுமதித்து சோதனை செய்த சமயம் அவர் சயனைட் உட்கொண்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர் என்றும் - பொலீஸார் கூறுகின்றனர்.

அந்த இளைஞர் தற்போது தீவிரமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-8)

## ஜெயலத் கோரிக்கை

கொழும்பு, மே15

யாழ் குடாநாட்டில், போர்ச் சூழலில் அகப்பட்டுள்ள பொதுமக்களின் நிலை குறித்து பகிரங்கப்படுத்துமாறு ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனா செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் கேட்டுள்ளார்.

# மரத்தை தறித்து வீழ்த்திய போது அதில் சிக்கிய பெண் மரணம்

நெல்லியடி,மே15

பொலிகண்டி, மடுவலை என்னும் இடத்தில் மரம் தறித்து வீழ்த்திய போது அதற்குள் சிக்கிய பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளியன்று நடந்த இந்தச் சம்பவத்தில் மேரி சொர்ணம்மா (வயது25) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

பாரிய ஒதியமரமொன்றைச் சிலர் தறித்து வீழ்த்தியதாகவும்- அந்த மரம் வீழ்ந்த சமயம் அதில் சிக்குண்டு நசுங்கிக் காயமுற்ற நிலையில் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டதாகவும்-

பின்னர் அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சமயம் அங்கு மரணமானார் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் குறித்து விசாரணை நடத்திய பதில் நீதிவான் ஏ.கே. நடராசா விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (உ-3-109)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு பொது அமைப்புகள் உதவி

யாழ்ப்பாணம்,மே15

தற்போது யாழ். குடா நாட் டில் நிலவும் போர்ச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து கொக்குவில் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு சமூக சேவைக் , கழகங்கள் பல உதவி வருகின்றன.

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய த்தினர், யாழ். மத்திய பிரிவு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் ஆகியோர் இடம் பெயர்ந்த மக்களுக்குச் சமைத்த உணவு வழங்கியுள்ளனர்.

யாழ் நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் இந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கியுள்ளனர். இந்த முயற்சியில் சில பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களும் இணைந்து செயற்படவுள்ளன.

# காயமடைந்த படையினரின் நலன் காக்க பல திட்டங்கள்

கொழும்பு,மே15

வடக்கு யுத்தத்தில் காயமடைந்து கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் படையினருக்கு பல்வேறு பொது அமைப்புக்களும் பல உதவிகளை வழங்கி வருகின்றன.

பாதிக்கப்பட்ட படையினருக்கு ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள் என்பனவற்றை அவர்கள் வழங்கியுள்ளதாகவும்-

ஊவா, வயம்ப, ராஜரட்ட, சப்ரகமுவ, றுகுணு, கந்தரட்ட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வங்கிகள் சாயமடைந்த படையினரின் நலன் கருதி விசேட நிவாரண நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் -

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் காயமடைந்த படையினரின் நலன் கருதி அவர்களுக்கான கடன் திட்டம் ஒன்றையும் -

காயமடைந்த படையினரின் தொழில் வாய்ப்பற்ற குடும்ப அங்கத்தவர்களுக்குச் சுயதொழில் வேலைவாய்ப்பை ஏற்படுத்த மற்றுமொரு கடன் திட்டத்தையும் -

தாங்கள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் - இலங்கை வங்கிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (உ-8-4-5-9)

# மானாவாரிப் பயிர்ச்செய்கை குடாநாட்டில் முன்னேற்றம்

யாழ்ப்பாணம்,மே15

கடந்த பெரும்போகத்தில் மழை வீழ்ச்சி பரம்பலாக இருந்த காரணத்தினால் யாழ். மாவட்டத்தில் மானாவாரிப் பயிர்ச்செய்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக விவசாயத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1999 புரட்டாதி தொடக்கம் [illegible] பங்குனி வரையான ஏழுமா[illegible] பகுதியில் ஆயிரத்து 534.2 மி.மீற்றர் மழை யாழ். மாவட்டத்தில் பெய்துள்ளது.

கார்த்திகை மாதத்தில் மட்டும் 541.9 மி.மீற்றர் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த பெரும் போகத்தில் 8 ஆயிரத்து 561 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் ஆரம்பத்தில் பெய்த மழை [illegible] யத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## கவுணாவத்தை வயிரவர் கோயில் திருவிழா

### 20.05.2000

**தற்போதைய சூழ்நிலை காரணமாக மேற்படி கோயிலில் 20.05.2000 இல் நடைபெறவிருந்த திருவிழா இக்கோயிலிலிருந்து 500 யார் தூரத்தில் இருக்கும் சேந்தான்குளம் 'சந்திரிக்கன் வாய்க்கால்' என்னும் இடத்தில் இடம் பெறவுள்ளது.**

**20.05.2000 அன்று குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்ளத் தவறுவோர் 28.05.2000 அன்று தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொள்ளலாம்.**

**ந.பத்மநாதன்**
*கோயில் நிர்வாகி*

(C/12109)

## தவறிவிட்டது

ஆர்.பரஞ்சோதிநாதன் என்பவரது 463282552V இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள கண்ணன் பான்ஸி முன்பாக கடந்த 12 ஆம் திகதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 99/7, பிறவுண் வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (76149)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஆறுமுகசாமி

(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்)

சுன்னாகம் வரியப்புலத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகசாமி நேற்று (14.05.2000) காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆ.நாகேந்திரா(பாடசாலை வேலைப் பிரிவு பரிசோதகர் - வலிகாமம் கல்வித் திணைக்களம்) திருமதி சி.நாகபூஷணி, திருமதி ஈ.நாகராணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவானந்தன்(ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற த.சண்முகசுந்தரம்(முன்னாள் மின் அத்தியட்சகர் - இலங்கை மின்சாரசபை, வவுனியா), திரும்தி அருந்ததிநாயகி நாகேந்திரா(மருந்தாளர்-யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சி.நந்தகுமார் (ஆசிரியர் - அக்கரைப்பற்று முஸ்லிம் மகாவித்தியாலயம்), செல்வி.சி.சிவதர்ஷினி(ஆசிரியை - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), சசிரூபன்(IIS, யாழ்ப்பாணம்), நா.ஜனார்த்தனன், க.சசிகரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி - A/L மாணவர்கள்) திருமதி.ந.யாழினி(திட்டமிடல் பகுதி - வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற க.சிவப்பிரகாசம்(முன்னாள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி), திருமதி ஐ.சிவபூஷணி (தெஹிவளை) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (14.05.2000) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம் வடக்கு*
*சுன்னாகம்.*

(C/121110)

தகவல்:
ஆ.நாகேந்திரா
(அன்பு மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அமெரிக்கா உடன் செயற்படுமா?

இலங்கை இனப்பிரச்சினையில் தற்போது உண்டாகியுள்ள நெருக்கடி நிலைக்கு அசியல் தீர்வு காணும் வழிமுறைகள் குறித்து அமெரிக்க அரசாங்கம் இலங்கை, இந்தியா, நோர்வே ஆகிய நாடுகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உத்தியோக பூர்வ அறிவிப்பு இது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பும் செயற்பாடும் மிகவும் வரவேற்கத்தக்கன. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது; அரசியல் தீர்வே காணப்படவேண்டும் என்பது வெறும் அரசியல் ஆய்வாளர்களின் கருத்து மட்டுமல்ல இப்போது அது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் நோர்வே அரசை அமெரிக்க அரசு ஊக்குவித்து வருவதாகவும் அறிவிக்கப் படுகிறது. அதுவும் ஒரு நல்ல சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என நம்ப இடமுண்டு.

அதேபோன்று இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே எடுத்து வரும் முன்முயற்சிகளுக்கு இந்தியாவும் ஆதரவு தெரிவித்திருக்கின்றது. அதனைவிடவும் சிறப்பாக, இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டால் சமாதான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தாம் தயார் என இந்திய அரசு அறிவித்திருக்கின்றது.

இவை யாவும் நல்ல அரசியல் பரிமாணங்களே. யார் குற்றினாலும் அரிசியாகட்டும் - உடையாத முழு அரிசியாகட்டும் - என்பதே இலங்கை மக்களில் அனேகரின் விருப்பமாகும். ஆனால் அதனை விடவும் மிக அவசரமானதும் அவசியமானதும் உடனடியாகச் செயல் வடிவம் பெறவேண்டியதும் பேரழிவைத் தரக்கூடிய யாழ்ப்பாண நகரப் போரை நிறுத்துவதே ஆகும். யாழ்ப்பாண நகரில் போர் ஒன்று வெடிக்குமாயின் அது பெரும் மனித அழிவையும் உடைமைச் சேதத்தையும் உண்டாக்கும் என்பது நாம் சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் மற்றும் சர்வதேச அவதானிகள் ஏற்கனவே இது குறித்து சர்வதேச சமூகத்தின் காதுகளில் போட்டிருந்தனர்.

எனினும் அதனை ஓர் அவசர விடயமாகக் கொண்டு சர்வதேச சமூகம் - அமெரிக்கா, இந்தியா, நோர்வே உட்பட்ட நாடுகள் - செயற்படத் தவறியமை மிகவும் வருந்தத்தக்கதாகும். இனப் பிரச்சினையின் இப்போதைய நெருக்கடி யாழ்ப்பாண நகரப் போர்தான். தற்காலிகப் போர் நிறுத்தம் செய்ய விடுதலைப்புலிகள் முன்வந்த போது இலங்கை அரசு அதனை நிராகரித்தது.

அவ்வேளையில் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் புத்திமதி கூறி போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு செயற்பட்டிருந்தால் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிருக்கு என்னாகுமோ என்ற பதற்றத்துடன் அந்தரித்துத் திரிய வேண்டிய நிலை ஏற்படாது தடுத்திருக்க முடியும்.

இப்போது கூட காலம் பிந்திவிடவில்லை. இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் உடனடியாக அவசரமாகச் செயற்பட்டு யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். லட்சக் கணக்கான மக்களின் உயிராபத்தைத் தவிர்ப்பது பெரும் மனிதநேயச் செயல் என்ற வகையிலாவது இந்தியா மற்றும் அமெரிக்கா யாழ்ப்பாண நகர்ப் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் உடன் செயற்பாடு தேவை.

குறிப்பாக நீண்டகாலம் எடுக்கக் கூடிய அரசியல் தீர்வில் அக்கறையும் ஆர்வமும் காட்டுவதாக அறிவித்துள்ள அமெரிக்கா உடனடித் தேவையான யாழ்ப்பாண நகர மக்களின் உயிரிழப்புகளைத் தடுக்க, தவிர்க்க தாமதிக்காது விரைந்து செயலில் இறங்கவேண்டும்.

# ஈழத்தமிழர்கள் உரிமைகளுடன் வாழ்வதையே விரும்புகின்றோம்

## கருணாநிதி கூறுகின்றார்

சென்னை,மே15

"இலங்கையில் தமிழர்கள் உரிய உரிமைகளைப் பெற்று அமைதியான சூழ்நிலையில் வாழ வேண்டும் என்பதே எமது எண்ணம். அந்த அடிப்படையில்தான் தனி ஈழமே பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறுகிறேன் என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

தி.மு.க ஆட்சியின் ஐந்தாண்டுப் பூர்த்தியை ஒட்டி நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனித்தமிழீழம் தொடர்பாக நான் கருத்துக் கூறியதற்காக தனித் தமிழீழத்தைப் பெறுவதற்கு தமிழ் நாட்டைத் தளமாகப் பாவிப்பதையோ, தீவிரவாத நடவடிக்கைக்கு ஓர் இடமாக தமிழகம அமைவதையோ நாம் ஏற்றுக்கொண்டதாகக் கருதக் கூடாது. அத்தகைய செயற்பாட்டை நாம் வரவேற்பதாக நாம் கொள்ளக் கூடாது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக



நடவடிக்கை எடுத்து வருகிறோம். தீவிரவாதச் செயல்களுக்கு இங்கு இடமளிக்கப் படமாட்டாது.

இலங்கைப் போராளிகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க கடல் ரோந்தைப் பலப்படுத்தியுள்ளோம்.

தனித் தமிழீழம் குறித்து நான் கருத்துக் கூறியதால் புலிகளின் பிரிவினைக் கோரிக்கையை நான் ஆதரிப்பதாகக் கொள்ளக்கூடாது. ஈழத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றையே நாம் விரும்புகின்றோம். தமிழீழத்தை வரவேற்பதால் தமிழ்நாட்டில் பிரிவினைக்கு வாய்ப்பு ஏற்பட்டு விடும் என்று கூறமுடியாது. பெரியார், அண்ணா தலைமையில் பலமான நிலையில் உருவான பிரிவினைக் கோரிக்கை கூட இங்கு கைவிடப்பட்டுவிட்டதே! - என்றார்.

(உ-3-9)

### 'விற்றமின் ஏ' சக்தி செறிந்த அரிசி

மணிலாவிலுள்ள அரிசி ஆராய்சி நிறுவனம் மற்றும் சுவிற்ஸர்லாந்து தாவர அறிவியல் நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 'விற்றமின் ஏ' சக்தி செறிந்த அரிசியை உருவாக்கி உள்ளனர். 'கோல்டன் றைஸ்' எனப் பெயரிடப்பட்ட இந்தப் புதிய ரக அரிசி வளரும் நாடுகளில் தாய் - சேய் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்ய உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தஆய்வு, ஆய்வு நிலையிலேயே இருந்து வருகிறது. இந்த அரிசியை வர்த்தக ரீதியான பயன்பாட்டுக்கு கொண்டு வர இன்னும் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 20 பேர் பலி; 230 பேர் காயம்

என்ஷேக்,மே15

நெதர்லாந்தில் என்ஷேக் நகரில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 20 பேர் பலியானார்கள். 230 பேர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பட்டாசுத் தொழிற்சாலையில் இருந்த 100 தொன் வெடிபொருள்கள் வெடித்துச் சிதறத் தொடங்கியதை அடுத்து தொழிற்சாலைக்கு அண்மையில் இருந்த 2000 பேர் அப்புறப்படுத்தப்பட்டனர். தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயை அணைப்பதில் ஈடுபட்ட தீயணைப்புப் படையைச் சேர்ந்த இருவர் பலியரனார்கள். 2 அதிகாரிகளைக் காணவில்லை எனவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## பாகிஸ்தான், இஸ்ரேலை கண்டிக்கின்றார் ராமதாஸ்

இலங்கை இராணுவத்துக்கு உதவி அளித்தமைக்காக இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ்.ராமதாஸ் கண்டித் துள்ளார்.

விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதால் இத்தகைய உதவிகளால் புலிகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5-4)

## உலக அரங்கில்

## 40 பலஸ்தீனர் காயம்

டெல்அவிவ்,மே15

இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களை விடுதலை செய்யக் கோரி மேற்குக் கரையில் இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம நடத்தி வருகின்றனர். இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 40 பலஸ்தீனர்கள் காணமடைந்திருப் பதாக தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் வன்முறைகளில் ஈடுபட்டதாலேயே இஸ்ரேல் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் -

வன்முறைகளில் இஸ்ரேல் படையினர் பலர் காயமடைந்தனர் என்றும் இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார். (இ-8-9)

## ஏவுகணைத் தாக்குதலிலிருந்து சதாமின் மாளிகை தப்பியது

தெஹ்ரான்,மே15

ஈரானின் ஆதரவுடன் செயற்பட்டு வரும் கெரில்லா அமைப்பு ஒன்று ஈராக் தலைநகர் மீது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மாளிகை மயிரிழையில் தப்பியது.

இந்தத் தாக்குதலில் மூன்று வயதுச் சிறுமி ஒருவர் பலியானார். நால்வர் காணமடைந்தனர்.

ஈராக்கிலுள்ள சிறுபான்மை ஸியா முஸ்லிம்கள் மீது ஈராக் அரசு கடைப்பிடிக்கும் கெடுபிடிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஜனாதிபதி சதாம் ஹுசைனைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-8-9)

# இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கையை ஊரடங்கால் அறியமுடியவில்லை

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே15

ஊரடங்குச்சட்டம தொடர்ந்து அமுலில் இருப்பதால் தற்பொழுது இடம்பெயர்ந்துள்ள மக்களின் முழுமையான விவரங்களையும் பெறமுடியாதுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:- மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக பல இடங்களிலிருந்தும் வெளியேறியுள்ளனர். இவ்வாறு வெளியேறியவர்களின் எண்ணிக்கை பற்றி அறியமுடியாதுள்ளதுடன் அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்குவது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க முடியாத நிலை ஊரடங்கினால் ஏற்பட்டுள்ளது.

யாழ்.செயலக ஊழியர்கள் பலரும் இடம்பெயர்ந்துள்ளதாலும் தற்போதைய நிலையில் அவர்கள் வெளியே நடமாட முடியாதுள்ளதாலும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

யாழ்.மாவட்டத்திற்கு சில மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன. எம்மிடம் கையிருப்பில இருக்கும் பொருள்களை எந்தப் பகுதியில் களஞ்சியப்படுத்துவது என்று முடிவெடுக்க முடியாதுள்ளது.

நாவற்குழியிலுள்ள அரச களஞ்சியத்தில் மட்டும் 8 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தப்பகுதியில் போர் நடைபெறுவதனால் அங்கிருந்து பொருள்களை வெளியே கொண்டுவர முடியாதுள்ளது.

தற்பொழுது பருத்தித்துறை, சங்கானை, கோண்டாவில், யாழ்ப்பாணம், குருநகர்ப் பகுதிகளிலும் உணவுப் பொருள்கள் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்துக்குத் தேவையான மண்எண்ணெய், பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களும் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்களில் கையிருப்பில் இருக்கின்றன.

பங்கீட்டு அட்டைகள் மூலம் விநியோகம் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட எரிபொருள் ஊரடங்குச் சட்டத்தினால் பல இடங்களில் வழங்கப்படவில்லை.

காங்கேசன்துறையிலுள்ள களஞ்சியத்திலிருந்து கோதுமை மாவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாண் உற்பத்தியாளர்களுக்கும் மா விநியோகம் செய்யப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(உ-5)

# யாழ்.,கல்முனை தவிர்ந்த மாவட்டங்களில் 4 ஆயிரத்து 462 தொண்டர் ஆசிரியர்கள்

### அவர்களில் 2,953 பேர் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி

கொழும்பு,மே15

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களில் நிரந்தர ஆசிரிய நியமன நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியானவர்களில் இரண்டாயிரத்து 953 பேரின் பெயர்ப் பட்டியலை மாகாணக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கல்முனை கல்வி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நாலாயிரத்து 462 தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றுவதாக தொண்டர் ஆசிரியர் அமைப்புக்கள் தெரிவித்தன.

இதன்படி -

மட்டக்களப்பில் ஆயிரத்து 94 பேரும் - திருகோணமலையில் ஆயிரத்து 436 பேரும் -

மன்னாரில் 386 பேரும் -

வவுனியாவில் 323 பேரும் -

முல்லைத்தீவில் 660 பேரும் -

கிளிநொச்சியில் 563 பேரும்

கடந்த பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கல்முனை கல்வி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர் முகப் பரீட்சையை விரைவாக [illegible] டியாக அனுப்புமாறு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் கே.ரமேஸ்வரன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்காக பெயர்ப்பட்டியலை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடரீதியான வெற்றிடங்களுக்கு ஏற்ப வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறைந்தது 400 தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-4-8-9)

## 300 கிலோ வெடிபொருள் மீட்பு

கொழும்பு.மே15

கொழும்பிலுள்ள நாரம்பன, மினுவாங்கொட பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த 317 கிலோ கிராம் 'ஜெலிக் நைற்' மற்றும் வெடிமருந்துகள் குளியாப்பிட்டி பொலீஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன் 413 டெற்றனேற்றர்களும் முந்நூறு அடி நீளமான திரியும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர். மீட்கப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி சந்தேக நபரின் பெற்றோரின் வீட்டுத் தோட்டத்திலும் இருந்து மீட்கப்பட்டதாக குளியாப்பிட்டி பொலீஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர் மீதான விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் புலிகளின் பேச்சாளராக ரணில்!

## அமைச்சர் மங்கள சமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு,மே15

விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரசாரத்துக்கு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்து வருகின்றார். இதன் காரணமாக அவரைக் கொழும்பில் புலிகளின் பேச்சாளர் என்று குறிப்பிட வேண்டியுள்ளது.

தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பி.பி.ஸி. உலக சேவைக்கு நேற்று முன் தினம் பேட்டியளித்திருந்தார்.

அதற்குப் பதிலளித்து விடுத்த அறிக்கையிலேயே அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவரை புலிகளின் பேச்சாளர் என்று சாடினார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் யாழ். கச்சேரியைக் கைப்பற்றியதாக வெளியான தகவலில் எந்தவித உண்மையும் இல்லை என்று அரசாங்கம் நிரூபித்திருந்தது. அப்படியிருந்தும் பி.பி.ஸிக்கு ரணில் விக்கிரமசிங்க தவறான தசவல்களை வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகள் கச்சேரி வளாகத்துக்குள் நுழைந்துள்ளது பற்றித் தனக்கு நிச்சயமாகத் தெரியும் என்று ரணில்பி.பி.ஸிக்குஅளித்த பேட்டியில் கூறியுள்ளார். ஆனால் அதற்கு முன்னரே யாழ். கச்சேரி வளாகத்துக்குள் நுழைய முயன்ற 12 விடுதலைப் புலிகள் கொல்லப் பட்டதுபற்றி அரசாங்கம் அறிவித்திருந்தது.

1983 ஆம் ஆண்டு முதல் ஐ.தே.க.நேர்மையற்றதும் துரதிர்ஷ்டி அற்றதுமான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றது.

அவர்கள் ஆயுதம் ஏந்திய புலிகளின் பிடிக்குள் மக்களைச் சிக்க வைத்தது மட்டுமன்றி புலிகள் வடக்கு - கிழக்கு பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கும் வழியேற்படுத்திக் கொடுத்தார்கள்.

இப்படி அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-9)

# இந்தியாவின் ஒப்புதலுடனேயே இலங்கைக்கு இஸ்ரேல் ஆயுதம்

கொழும்பு,மே15

இலங்கைக்கு நவீன ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு முன்னர் அது தொடர்பாக இந்தியாவின் ஒப்புதலை இஸ்ரேல் பெற்றுக் கொண்டது என்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இலங்கை கொள்வனவு செய்த ஆயுதங்கள் கப்பல்கள் மூலம் இலங்கைக்கு எடுத்து வரப்படும் போது இந்து சமுத்திரக் கடற்பிராந்தியத்தில் தனது கடற்படையை உஷார் நிலையில் வைத்திருந்து அந்தக் கப்பல்களுக்கு உரிய பாதுகாப்பளிக்க இந்தியா இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

## மீண்டும் இயங்குகிறது

நான்கு நாள்களுக்குப் பின்னர் நேற்று போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு இயங்கியது.

கடந்த புதன்கிழமை திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து நோயாளர்கள் வருகையின்றி வெறிச்சோடிக் கிடந்த வெளி நோயாளர் பிரிவுக்கு நேற்று ஐந்து நோயாளர்கள் வந்திருந்தனர்.

## தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குத் தொலைபேசிச் சேவை இணைப்பை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தொலைபேசித் தொடர்பு உண்டாவதற்கான சமிக்ஞைகள் எதுவும் தென்பட வில்லை -

ஆகையால் இனிமேல் புதிய தொழில்நுட்ப வழிமுறை களையே பரீட்சித்தும் பாாக்க வேண்டும் என்றும் அவை வெற்றி அளிக்கின்றனவா என்பதனைக் கண்டறிவதற்கு ஒரு மாதத்துக்கு மேலாகும் - என்றும் அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-164)

## ப. நோ. கூ. ச. ஊழியர்களுக்கு

நெருக்கடி நேரத்தில் பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காகக் கடமைக்குச் சமுகம் தரும்படி யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஊரடங்கு நீக்கப்படும் வேளையில் கைலாசபிள்ளையார் கோயிலில் உள்ள ப.நோ. கூ. சங்கத்தின் களஞ்சியத்துக்கு சமுகம் தருமாறு கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள், மேற்பார்வையாளர்கள், சாரதிகள் மற்றும் ஊழியருக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் இல்லாத பிரதேசங்களில்

# வ.பி.போ.ச. பஸ் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.மாநகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருக்கும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் இன்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இல்லாத பகுதிகளில் மட்டும் இந்த பஸ் சேவை நடைபெறும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்தார்.

மாதகல்(787), இளவாலை(788), காரைநகர், சுழிபுரம், அளவெட்டி (768), தெல்லிப்பழை(769), குப்பிளான்(770) ஆகிய பாதைகளில் நடைபெறும் பஸ் சேவைகள் கொக்குவில் சந்தி வரையிலும் -தெல்லிப்பழையிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஊடாக நடைபெறும் பஸ் சேவை உட்பட பலாலி வீதியூடான சேவைகள் அனைத்தும் பரமேஸ்வராச் சந்தி வரையிலும் - பருத்தித்துறை வீதியூடாக 750, 751 இலக்க பஸ் சேவைகள் கல்வியன் காடு வரையிலும்-

சாவகச்சேரி - சுன்னாகம்(811) பாதையில் நடைபெறும் பஸ் சேவைகள் கோப்பாய் வரையும் - 775 இலக்க பஸ் சேவை வாதரவத்தை வரையிலும் இடம்பெறும்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் நாள்களில் 811, 775 இலக்க பஸ்கள் தவிர்ந்த அனைத்துபஸ் சேவைகளும் பகல் 12மணி வரையும் யாழ். பஸ்நிலையத்திலிருந்து நடைபெறும்.

-இப்படி அவர் மேலும் கூறினார்.

## தபால் பொதி

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் இன்று திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறை நோக்கிப் புறப்படவுள்ளது.

நோயாளர்களை ஏற்றிவரும் இக் கப்பலில் 106 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுகின்றன. (இ-5)

## விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே15

இருபாலையில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறை மாணவன் ரவிராஜ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## வரதர் அணிக்கு அனுமதி

வரதராஜப்பெருமாள் அணியைச் சேர்ந்த 29 பேர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகக் கொழும்பு தமிழ்த் தினசரி ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது. (உ-164)

## ஊர்காவற்றுறையில் சம்பவம்

ஊர்காவற்றுறையில் பத்துக்கும் அதிகமான இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கோஷ்டி ஒன்றனால் நையப்புடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். நகரிலிருந்து இடம் பெயர்ந்து சென்றவர்களைப் பகலில் கேலி செய்தமைக்காக இரவில் அவரவர்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இடம்பெயர்ந்த மக்களின் நலன்கள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.நகர் உட்பட பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்து வலி. மேற்குப் பிரதேசத்தில் தஞ்சமடைந்துள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சுழிபுரத்திலுள்ள வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவரும் வட்டுக்கோட்டை ஈ.பி.டி.பி அமைப்பாளருமாகிய ந.திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வலி. மேற்கில் கடமையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் வலி.மேற்குப் பிரதேசத்தில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தாம் தங்கியிருக்கும் பகுதியிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தரிடம் உடனடியாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும்-

ப.நோ.கூ. சங்கங்கள் இடம் பெயர்ந்தோருக்கான் நிவாரணத்தை துரிதமாக வழங்க வேண்டும் என்றும் - தீர்மானிக்கப்பட்டது. (உ)

# யாழ்.ஆஸ்பத்திரி ஊழியருக்கு!

யாழ்.ஆஸ்பத்திரியின் தற்போதைய வேலைகளைத் தொடர்வதற்கு தாதியர் மற்றும் சிற்றூழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாகவும் -

எனவே மருத்துவ சேவையின் அவசியத்தை உணர்ந்து சம்பந்தப்பட்ட ஊழியர்களைக் கடமைக்குத் திரும்பும்படியும் -

யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுள்ளது.

ஊரடங்கு நீக்கப்படும் வேளைகளில் தாதியர்கள், சிற்றூழியர்கள் ஆஸ்பத்திரிக்குத் தவறாது சமுகம் தந்தால் கடமைகளைத் திட்டமிட்டுப் பகிர்ந்து கொள்வது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று ஆஸ்பத்திரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தற்போது யாழ்.ஆஸ்பத்திரியில் தாதியர், சிற்றூழியர்களை விட அதிக எண்ணிக்கையில் டாக்டர்கள் பணி புரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ)

## ஆறாயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ உதவி எமக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. அதனால் அந்த நாட்டுடன் 30 வருடங்களின் பின்னர் இராஜீக உறவுகளை புதுப்பித்துக்கொண்டோம். ஆயுதங்களில் பெரும் பகுதி இஸ்ரேலிடந்தான் கொள்வனவு செய்யப்பட்டது. இவை வெறும் அன்பளிப்புகள் அல்ல. நவீன ஆயுதங்களுக்கு விலையாக நாம் 80 கோடி அமெரிக்க டொலரைச் செலுத்தியுள்ளோம் - என்றார் அமைச்சர்.

"இஸ்ரேலுடன் இலங்கை உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கு இந்தியாவும் பச்சைக்கொடி காட்டியதாகக் கூறப்படுகின்றதே?" என்று கேட்டதற்கு -

"இலங்கை இறையாண்மை கொண்ட ஒரு நாடு. இன்னொரு நாட்டுடன் அது இராஜாங்க உறவினை ஏற்படுத்திக்கொள்ள எவரது அனுமதியும் உதவியும் அவசியமல்ல" - என்று அமைச்சர் பதிலளித்தார். (உ)

## சமர் நேற்றும்...

(முலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் -

யாழ்ப்பாணத்தில் மக்கள் வசிக்கும் பகுதிகளின் மீது புலிகள் ஷெல் பீரங்கித் தாக்குதல்களை நடத்துவதாக இலங்கை அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

மக்கள் வாழும் பகுதிகள்மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு புலிகளைக் கோரும்படி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவை அரசு கோரியுள்ளது என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

யாழ்.நகர் கிழக்கில் அரசுப் படைகள் மீது புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலை தாங்கள் முறியடித்துவிட்டதாகவும் அரசுத் தரப்பு அறிவிப்புத் தெரிவித்தது.

இதற்கிடையில் -

நகரின் கிழக்கு எல்லைப் பகுதியை தாங்கள் எட்டிவிட்டதாகவும் - நகர் மீது இறுதித் தாக்குதல்களுக்குத் தாங்கள் தயாராகி வருவதாகவும் -

புலிகள் அறிவித்துள்ளனர். (உ-9-5)

## யாழ்.ஆஸ்பத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலையாக இருக்கும் யாழ்.போதனாவைத்தியசாலை மீது கடந்த காலங்களில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் பல நோயாளர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை யாழ்.போதனா வைத்தியசாலை சுற்றாடலை பாதுகாப்பு வலயமாக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் அதுகுறித்து இலங்கை அரசாங்கமோ அல்லது விடுதலைப் புலிகள் அமைப்போ இதுவரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை அணுகவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (இ-5-9-139)


## ஈசன் கல்வி நிலையம்

K.K.S. வீதி, கோண்டாவில்.

எமது நிறுவனத்தின் சகல வகுப்புக்களும் இன்று திங்கட் கிழமை முதல் வழமையான நேர அட்டவணையின் படி நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். (76151)



## முக்கிய அறிவித்தல்

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயிலின் தேர் முடியை நாளை செவ்வாய்கிழமை ஒப்படைக்குமாறு 313, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள **சாமி களஞ்சிய** உரிமையாளரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

க.காசிநாதன்,
*தேர்த் திருவிழா உபயகாரர்.*
*சங்குவேலி.*

(C/12113)



## KONICA COLOUR LAB
## அறிவித்தல்

எமது ஆய்வுகூடத்தில் புகைப்படச் சுருள்களைக் கழுவுவதற்காக ஒப்படைத்தவர்கள் ஊடரங்கு நீக்கும் சமயத்தில் ஆய்வுகூடத்துக்குச் சமுகம் தந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

## கொனிக்கா கலர் லாப்

14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, (நாவலர் வீதியிலிருந்து) பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (C/12114)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி பொன்னம்பலம் கமலாதேவி

(இளைப்பாறிய ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னம்பலம் கமலாதேவி 14-05-2000 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், சங்கரப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பெறாமகளும், சறோஜினிதேவி, தர்மராஜா (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), ஜெயலக்ஷ்மி (பிரான்ஸ்), கணேசலிங்கம் (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம், வன்னியசிங்கம் (பிரான்ஸ்), சீலாவதி (ஜேர்மனி), சுசீலாதேவி, சதேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15-05-2000) திங்கட்கிழமை 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"கமலாம்பிகை பவனம்"*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(C/12112)

தகவல்:
பொ.பாலசுப்பிரமணியம்
(சகோதரன்)

## பாலசுப்பிரமணியம் சுரேஷ்

சிறுப்பிட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சுரேஷ் ஜேர்மனியில் மாரடைப்பால் காலமானார். இவர் நன்னி இளையதம்பியின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரேமா(டென்மார்க்)
நேரு மாஸ்டர் (கொழும்பு)

(C/12115)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org